| | | |
|---|---|---|
| **Date** | : | 03.02.2026 |
| **OS** | : | 47/2019 |
| **PW** | : | 2 |
| **Name** | : | பாலசுப்ரமணியன் |
| **Father/ Husband Name** | : | ராஜகோபாலன் |

**1,3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.(சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)**

1.நான் ஸ்டில்ரோலிங் மில் லில் விற்பனை மேலாளராக பணியாற்றினேன். எனக்கு ஆதார் அட்டையில் முகவரி திருக்கோகரணம் என குறிப்பிடபட்டுள்ளது. திருக்கோகரணம் நகராட்சியாக இருந்து பின்னார் மாநகராட்சியாக சேர்ககபட்டது என்றால் சரிதான். எனது ஆதார் அட்டையில் குளத்துார் முகவரியை நான் மாற்றவில்லை என்றால் சரியல்ல. மாற்றிவிட்டேன். நான் திருக்கோகரணம் முகவரியில் வசித்ததாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதனை வழக்கறிஞர்களிடம் தான் கேட்க வேண்டும்.

2.இந்துஸ்தான் டிம்பர் டிரேடிங் கம்பெனி தனியார்க்கு சொந்தமானதா அல்லது கூட்டாண்மை நிறுவனமா என்றால் கூட்டாண்மை நிறுவனமாகும். அதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் வேலை பார்த்த போது அந்த நிறுவனத்திற்கு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராக நியமித்துள்ளேன். முகமது மீராவின் தகப்பனாரின் பெரியம்மா என்றால் பார்த்துள்ளேன். முகமது மீரா தனது குடும்ப செலவிற்காக கடன் வாங்கினாரா அல்லது கூட்டாண்மை நிறுவனத்திற்காக கடன் வாங்கினாரா என்றால் கூட்டாண்மை நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக வாங்கினார். நான் பங்குதாரர்களிடம்

கடன் வாங்குமாறு சொன்னேனா என்றால் அது எனக்கு தெரியாது. (சாட்சி மீண்டும் தனிப்பட்ட முறையில் வீரசாமி கடன் கொடுத்ததாக கூறுகிறார்.)

3. வ.சா.ஆ 1 பிராம்சரி நோட்டில் ஆங்கிலத்தில் எழுதபட்ட எழுத்துக்கள் என்னால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த எழுத்துக்களை யார் எழுதினார்கள் என வ.சா.ஆ 1 ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். முகமது மீரா வாதிக்கு வட்டி கொடுத்தாரா இல்லையா என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வட்டி எதுவும் முகமது மீரா கொடுக்கவில்லை. 30.11.2017 பிறகு நான் முகமது மீராவை பார்க்கவில்லை. முகமது மீரா காசோலை கொடுத்த தேதி 30.11.2017 ஆகும். அந்த காசோலை சிட்டி யூனியன் வங்கி புதுக்கோட்டை கிளை காசோலை ஆகும். பிராமிசரி நோட் கொடுத்த அன்று காசோலை கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிராமிசரி நோட் ஏற்பட்டதாக சொல்லும் தேதிக்கு பின்னர் நான் முகமது மீராவை சந்திக்க வாய்பில்லை என்றும் அதனால் முகமது மீரா காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் முகமது மீரா காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வீராசாமியை எனக்கு 2015 ம் ஆண்டு முதல் தெரியும். வீராசாமி டி.வி.எஸ் நிறுவனத்தில் மெக்கானிக்காக இருந்தார்.கூட்டாண்மை நிறுவனத்தின் முத்திரையை பிராமிசரி நோட்டில் வைக்குமாறு நான் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. தனிப்பட்ட முறையில் தான் கடன் கொடுத்தார்.

4. முகமது மீரா கூட்டாண்மை நிறுவனம் என்ன ஆனது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் கூட்டாண்மை நிறுவனத்தில் இருந்த முகமது மீராவின் கையொப்பத்தை வைத்து வ.சா.ஆ 1 பிராமிசரி நோட்டை தயார் செய்து வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும்

காசோலையானது முகமது மீராவின் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு உரியது என்றால் சரிதான். கூட்டாண்மை நிறுவனத்திற்கான காசோலையை வாங்கவேண்டும் என வாதியிடம் நான் சொன்னேனா என்றால் காசோலை கொடுத்தார். அது கூட்டாண்மை காசோலையா அல்லது தனிப்பட்ட காசோலையா என்பது எனக்கு தெரியாது.

5.நான் சொல்லும் தேதியில் முகமது மீரா வாதியிடமிருந்து கடன் எதுவும் பெறவில்லை என்றும் பிராமிசரி நோட் , காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5,6 பிரதிவாதிகளை இறந்த முகமது மீராவின் வாரிசுகள் அடிப்படையில் சேர்த்துள்ளார்களா என்றால் இந்துஸ்தான் டிரேடிங் கம்பெனியில் கூட்டாளிகள் என்ற முறையிலும் சேர்த்துள்ளார்.நான் சொல்வது போல் 5,6 பிரதிவாதிகள் இந்துஸ்தான் டிரேடிங் கம்பெனியின் கூட்டாளிகள் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் பற்றி எனக்கு முழுமையான விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். அவர்கள் எங்கு வாழ்ந்ததார்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அனைவரும் கூட்டு குடும்பமாக வாழ்ந்தார்கள். வாதி மோசடியாக வ.சா.ஆ 1 பிராமிசரி நோட்டை தயாரித்துள்ளார் என்றும் அதற்கு நான் உறுதுணையாக இருந்து விட்டு வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 5,6 பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>7,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பி.காம் வரை படித்துள்ளேன். 1985 முதல் இறந்த முகமது மீராவை தெரியும். 7,8 பிரதிவாதிகளுக்கு வாதியையோ என்னையோ தெரியாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறார்கள். வ.சா.ஆ 1 பிராமிசரி நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால்

இந்துஸ்தான் டிரேடிங் கம்பெனியில் வைத்து எழுதப்பட்டது. அப்போது யார் இருந்தார்கள் என்றால் நான் , வீராசாமி, முகமது மீரா ஆகிய மூவரும் இருந்தோம். ஆவணம் எழுதப்படும்போது பொதுவாக இரண்டு சாட்சிகள் கையெழுத்து போடுவது வழக்கம் என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் உள்ள எழுத்துகள் ஒரே நேரத்தில் எழுதப்பட்டது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் வெவ்வேறு தேதிகளில் எழுதப்பட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யபட்டது என்றால் சரியல்ல.

2. இந்துஸ்தான் டிரேடிங் கம்பெனி கூட்டாண்மை நிறுவனம் என்பதற்கான ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்றால் 1990 ல் விநியோக உரிமை வழங்குவதற்காக பார்த்தேன். நான் வேலை பார்த்த கம்பெனி ஸ்டில் கம்பெனி என்றால் சரிதான். இந்துஸ்தான் டிம்பர் டிரேடிங் கம்பெனி மரங்கள் விற்கும் கம்பெனி என்றால் ஸ்டிலும் விற்பனை செய்தார்கள் . நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் எங்களது கம்பெனியிலிருந்து விநியோக உரிமை எதுவும் வழங்கபடவில்லை என்றால் சரியல்ல. வ.சா.ஆ1 பிராமிசரி நோட் ஏற்பட்டதாக சொல்லும் தேதிக்கு முன்பாகவே கூட்டாண்மை நிறுவனம் கலைக்கபட்டுவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கூட்டாண்மை நிறுவனத்திற்கு கடன் வாங்கும் போது அதில் கூட்டாளிகள் அனைவரும் கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் முகமது மீரா கூட்டாண்மை நிறுவனத்திற்காக கடன் வாங்கவில்லை. முகமது மீராவிற்கு நான் சொல்லும் தேதியில் கடன் வாங்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டட வ.சா.ஆ 1 ஆவணத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. வ.சா.ஆ 1 ஆவணத்திற்கும் 7,8 பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 7,8 பிரதிவாதிகள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

ஒம்/- பாலசுப்ரமணியன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது,

ஒம்/-L. ரகுபதிராஜா

முதன்மை சார்பு நீதிபதி.
புதுக்கோட்டை.